[3rd August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுகிற கருத்து கனம் அங்கத்தினர் அவர்களுடையது. இதை விவசாயிகள் ஒருகாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

MR. SPEAKER : Some other subject is discussed in this question.

திரு. சா. கணேசன் : கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறுகிறபொழுது பருத்தி ஓரளவுக்குப் பற்றுக்குறையாக இருப்ப தாகக் கூறினர்கள். ஓரளவுக்கு அது உண்மையாக இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். பருத்தி பற்றுக்குறையாக இருப்பதைவிட, உணவுப் பற்றுக்குறை மிகக் கொடியது என்ப தினல் உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமே அன்றி, பருத்திக்குக் கொடுக்கப்படாது. ஆதலினலே இதைக் கவனத்தில் கொண்டு, பருத்தி உற்பத்தி தடைப்பட்டாலும், உணவு உற்பத்திக்கு ஆக்கம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒன்றோடு ஒன்று ஒப்பிடுவது முறையல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள் கிறேன். அப்படி ஒப்பிடுவதாக இருந்தாலும், இரண்டு நாட்களுக்கு உணவு இல்லாமல் இருக்கலாம், ஆனல் ஒரு நாளைக்குக்கூட ஆடை இல்லாமல் இருக்கமுடியாது (சிரிப்பு).

Export of cotton seeds from Coimbatore

* 47 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that cotton seeds are exported from the State in particular, from Coimbatore area to outside regions, particularly Bombay for extraction of oil; and

(*b*) whether the Government are aware of the consequent rise in price of cotton seeds in the State?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1965-ம் ஆண்டில் கோயம்பத்தூர் மாவட்டத்திலிருந்து ஏனைய பகுதிகளுக்குப் பருத்திக் கொட்டை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பம்பாய்க்கு ஏற்றுமதியான அளவைப் பற்றிய சரியான விவரங்கள் கிடைக்கவில்லை. பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்காகவே பருத்தி விதைகள் வெளியிலுள்ள ஏஜன்டுகளால் வாங்கப்படுகின்றன.

(இ) தெரியும்.

திரு. வை. சங்கரன் : அப்படித் தெரியுமானல், இம்மாதிரி பருத்துக்கொட்டையை இங்கிருந்து வெளி மாகாணங்களுக்கு அனுப்புவதால், இங்குள்ள பருத்திக்கொட்டையின் விலை அதிகரித்துக்கொண்டு வருவதின் விளைவை மனத்தில்கொண்டு, வெளி ராஜ்யங்களுக்கு இதை அனுப்புவதை அனுமதிக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து, அதற்குத் தடை விதிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

3rd August 1966]

கனம் திரு. பூ. கக்கன் : இதைப்பற்றி ஒரு தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்யலாம்.

மதுவிலக்கு வழக்குகள்

*48 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

எல்லா போலீஸ் ஸ்டேஷன்களிலும், மதுவிலக்கு கேஸ்கள் (Headwar statement) வாரத்திற்கு எத்தனை என்று கேட்கப் படுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : துப்புதுலக்கப்பட்ட வழக்குகள் பற்றிய வார, அல்லது மாத அறிக்கைகள் போலீஸ் நிலையங்களிலிருந்து வரவழைக்கப்பட்டு போலீஸ் சூப்பிரண்டுகளால் ஆய்வு செய்யப்படுகின்றன. வாரத்திற்கு இத்தனை மதுவிலக்குக் குற்றங்கள் கண்டு பிடிக்க வேண்டும் என்கிற அளவு எதுவும் நிச்சயிக்கப்படவில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு வாரத்திற்கு இத்தனை கேஸ்கள் போடவேண்டும் என்று சொல்லி, அப்படிப் போடாதவர்களுக்கு பனிஷ்மெண்டு கொடுத்திருக்கிறார்களே, அந்த பனிஷ்மென்டைப்பற்றிய குறிப்பை எழுதி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பினால், அத்தனையையும் 'வித்டிரா' செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : It is a hypothetical question. Let the hon. Member please send it first and then ask what action was taken on it.

பசுக் கொலைத் தடுப்பு

*49 **கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில், பசுக்களைக் கொலை செய்வதைத் தடுக்க அரசாங்கம் சட்டம் பிறப்பிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன் : தமிழ்நாட்டில் பசுக்கொலையைத் தடுக்கச் சட்டம் இயற்றுவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

Food-rationing

*50 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the quantum of food-ration to manual workers in the State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise.